Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்துசாதனம்

விரோதி [illegible] (1889) ஆவணி ௨௮ உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலே மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௬௧] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி௵ கார்த்திகைமீ ௧௪ உ வெள்ளிக்கிழமை (29 NOV. 1957) [இல-௩௪]

## இன்னும் பிரதமரை நம்பி வாழலாமா?

———:0:———

### ஒப்பந்தத்தால் தமிழருக்கு இடேற்றம் உண்டாகுமா?

( திரு. ச. பேரின்பநாயகன் B. A. )

1960-ம் ஆண்டு தொடக்கமாக புகைவண்டிகளிலும் வண்டி நிலையங்களிலும் இருக்கும் பெயர்ப் பலகைகள் சிங்களத்திலேதான் இருக்கும். புகையிரத வண்டிப் போக்குவரத்து நேரநிரலிலும் சிங்களத்திலேதான் இருக்கும். நீதி மன்றங்களிலும் சிங்களத்தையேகையாளச் சட்டம் நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து விட்டது.

'தெலிபோன்' விலாச அட்டவணையும் சிங்களத்திலேதான் இருக்கும். இச்செயல்களின் பெறுபேருக 1960-ம் ஆண்டு தொடக்கம் புகைவண்டியிற் பயணம் பண்ணுவோரும் தெலிபோன் பேச விரும்புவோரும் நீதிமன்றங்களில் நீதிபதிகளாயோ நியாயவாதிகளாகவோ கடமையாற்ற விரும்புவோரும் சிங்களத்தில் நிறைபயிற்சி பெற்றிருக்கவேண்டும். ஒருவேளை வழக்குகளுக்காக நீதிமன்றங்களுக்குப் போவோரும் சிங்களத்திலேயே நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படவுங் கூடும்.

இவையெல்லாம் இங்ஙனம் நடைபெற்றுக்கொண்டிருக்கவும் தமிழர் தமிழை நியாயமான அளவிற்கு உபயோகிப்பதற்குச் சட்டப்படி திட்டம் வகுக்கப்படுமென்று பிரதம மந்திரி பறை சாற்றுகின்ருர். உணவு மந்திரி தமிழரின் மொழி உரிமைக்குத் தமது அரசாங்கம் யாதும் தீங்கிழையாதென்று கூறுகின்ருர். தமிழரசுக்கட்சித்தலைவர்கள் தாம் பிரதமருடன் செய்துள்ள ஒப்பந்தம் செயல் முறைக்கு வரும் வரையும் தமிழர் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர். ஒப்பந்தம் செயலுக்கு வர முன் தனிச்சிங்களச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் பல செயலுக்கு வந்துவிடும்போல் இருக்கிறது. தமிழ் பேசும் மக்களுக்கும் தமிழுக்கும் இந்த இன்னல்கள் எல்லாம் நடக்கும்போதும்கூட தமிழரசுக் கட்சித் தலைவர்கள் மௌனம் சாதிக்கின்றனர். இப்போது அரசாங்கம்நிறைவேற்ற முற்பட்டிருக்கும் திட்டங்கள் ஒப்பந்தத்தில் சேராதவையோ? அப்படியென்ருல் ஒப்பந்தத்தால் தமிழுக்கும் தமிழருக்கும் எவ்வித ஈடேற்றம் ஆகுமோ?

தமிழர் இன்னும் பிரதமரையோ தமிழரசுக் கட்சியையோ நம்பி வாழலாமோ?

யாழ். மாநகரசபைத் தேர்தல்

## மகத்தான வெற்றிபெற்ருர் திரு. மன்மதராயன்

———0—0———

### பொதுவுடைமைக் கட்சியினர் புறக்கணிக்கப்பட்டனர்
### சமசமாசக் கட்சி தழைத்தது

பழையகால மாரிபோல மழை பாட்டம் பாட்டமாகப் பெய்த பொழுதும் மாநகர பிதாக்களைத் தெரிவு செய்யும் கடமையை யாழ் நகர மக்கள் சிரமேற்கொண்டு சிரமம் பாராது செய்து முடித்தனர். பழைய அங்கத்தவர்கள் சிலர் வெற்றி பெற்றனர். சிலர் தோல்வி யுற்றனர். புத்தம் புதிதாக நகரசபை அரசியலிற் புகுந்தவர்கள் இந்த ஆண்டு அங்கத்தவர்களாக இருக்கின்றவர்களில் ஆறுபேர் மறுபடியும் அங்கத்தவர்களாயினர். நால்வர் அங்கத்துவத்தை இழந்தனர். ஐவர் போட்டியிடாது விட்டனர்.

தேர்தல் விமரிசனத்திலே தெற்றெனத் தோற்றுவது பொதுவுடைமைக்கட்சியைப் பொதுசனம் புறக்கணித்தமையே! மற்றது சமசமாசக் கட்சி அங்கத்தவர்கள் இருவரின் வெற்றி. இடதுசாரிக் கட்சிகளை விட ஏனைய கட்சிகள் கொடி கட்டிப் போட்டியிடவில்லை. எனினும் சில இடங்களிலே வெளியாக அநுதாபங் காட்டப்பட்டபொழுதும் பலன் கிடைக்கவில்லை. முன் இரு முறைகளில் நகர பிதாவாக இருந்த திரு. மன்மதராயன் அவர்கள் இத்தேர்தலில் என்றுமில்லாத அதிகப்படியான வாக்குகளைப் பெற்று இரு அபேட்சகர்களைத் தோற்கடித்திருக்கின்ருர். தொடர்ந்து பல முறைகளாக அங்கத்தவராக இருந்து வந்த காதி M. M. சுலுத்தானும் பெருவெற்றியடைந்தனர்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

அரசியல் அலை

## பிரதமரின் அரசியல் அமைப்புத் திருத்தப்பிரேரணை

### எதிர்த்தவர்கள் இருவர்களே!

### குடியரசு நிறுவும் - - - - கொள்கைக்கு ஆதரவு

**வவனியா அங்கத்தவரின் வாய்முழக்கம் கண்டன மின்னல் யாவும் பயனற்றனவாகப் பிரதமரின் பிரேரணைக்காக நாற்பத்தொருவரும் எதிராகஇருவரும் வாக்களித்தனர். அது நிறைவேறியது. வேலைநிறுத்த விபரீதத்திலும் மேலான விபரீதம் இதுவே.**

பிரதமரின் பிரேரணையிலே குடியரசு நிறுவுதலே அடிப்படைக் கொள்கையாயுள்ளது. திரு. C. சுந்தரலிங்கம் அவர்கள் அரச விசாரணை ஆணைச்சபைதான் இதை ஆராய்தல் வேண்டும் என்று திருத்தப் பிரேரணைகொண்டுவந்தார். அவரொருவரே அதற்கு ஆதரவாளராயுமிருந்தார்.

அரசியல் அமைப்புப் பிரத்தியேக மன்றம் தெரியப்படல் வேண்டும் என்று திரு. G. G. பொன்னம்பலம் அவர்கள் பிரேரித்த திருத்தம் ஆறு தமிழ் பேசும் அங்கத்தவர்களின் ஆதரவுமட்டும் பெற்றுத் தோல்வியடைந்தது.

சமஷ்டி ஆட்சி நிறுவுதல் பொருத்தமானது என்ற திருத்தம் திரு. S. J. V. செல்வநாயகம் அவர்களாற் கூறப்பட்டது. இது வாக்களிப்பின் கணக்கு எடுக்கப்படாதே தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்டது.

பிரதமரின் பிரேரணையை எதிர்த்தவர்கள் திரு. பொன்னம்பலமும், திரு. சுந்தரலிங்கமுமே.

வழமைபோலப் பிரதமர் வாக்குக் கொடுத்திருக்கின்ருர். சமஷ்டி ஆட்சி நிறுவுவது பற்றியும் ஆராயப்படுமாம். ஆனுற் பிரேரணையில் அது இடம்பெறவில்லை.

**சமாசத்துக்கு வெற்றி!**

இந்தப் பிரேரணை விவாதிக்கப்படும்பொழுது திரு. சுந்தரலிங்கத்துக்கும் திரு பண்டாரநாயக்கவுக்கும் இடையிற் காரசாரமான சொற்போர் நடந்தது. ஈற்றிலே பிரதமர் விடுத்த சொற்களை இன்னெருவர் எடுத்துச் சொல்ல எண்ணுவாரோ என்ருற் பிரதமரே நாணுவார் என்பதற்கையமில்லை.

**மேற்சபையிலே**

சமாசம் பிரதமரோடு நின்றுவிடவில்லை. மேற்சபையிலே 'நீதிமன்றங்களிலே தனிச்சிங்களச் சட்டம் [illegible] வேண்டுமென்ற' பிரேரணை கைவிடப்பட்டது.

## உத்தராயணத்தின் உத்தமம்

( "சௌரிராயன்" )

காலையில் எழுவானில் கருங்கடலில் ஞாயிறு எழும் காட்சி புலவர்களைச் சிந்தனையில் ஈடுபடச் செய்வதை திருமுருகாற்றுப் படையிற் காணகின்ருேம். இக்காட்சி ஒரு வைத்தியனுக்கு கருங்கடல்ஒருஅழகான மகனைப் பெற்றதுபோலத் தோற்றமளிக்கும். காலை, மத்தியானம், மாலை, நடுநிசி ஒரு தினத்தின் முக்கியமான சந்திகளாகும். இந் நான்கும் சாதகத்தில் கேந்திரத்தானங்களாகிய 1, 10, 7, 4-ம் இடங்களாகும். எமக்கு ஒரு வருடம் தேவுக்களுக்கோர் தினமாகும்: பூமியின் நடுரேகையைக் கடந்து வடக்கு நோக்கிப் போகும் போது சூரியன் தேவலோகத்தில் உதயமாகி, வட திசையின் அந்தத்தை அடையும்போது மத்தியானமாகி, திரும்பித்தென்பால்நோக்கிவந்துநடுரேகையைக் கடக்கும்போது மாலையாகி தென்றிசையின் அந்தம் அடையும்போது தேவுக்களின் நடுநிசி சம்பவிக்கும். மறுபடியும் சூரியன் வடக்கு நோக்கித் திரும்பும்போது தேவலோகத்தில் நின்று பார்த்தால் இரவின் கரிய இருட்டில் அழகான ஒரு மகவு பிறந்தாற்போலிருக்கும். இந்தத் திவ்விய முகூர்த்தத்தைக் கவனித்தால் கீழ்வானத்தில் கன்னிராசி உதயமாகும். உச்சியில் மிருகசீரிடம் அழகாகக் காட்சி அளிக்கும். சூரிய வழிபாட்டுக்காரர் இதைக் கன்னியில் மாரி ஈன்ற பிள்ளை என வர்ணிப்பார்கள். யோசித்துப் பார்க்கும்போது. சூரியன் மார்கழி மாசத்தில்கன்னி இலக்கினத்தில்அர்த்தஇராத்திரியில் வடக்கே திரும்பும் காட்சி (உத்தராயணம்)வட துருவத்தில் உள்ளோர்க்குப் பெரு மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஏனென்ருல் நீடிய இரவும் இருட்டும் குளிரும் போக்கி அவர்களுக்கு ஒளியும் வெப்பமும் கொடுத்து அவர்களைக் காப்பாற்றும் இளம் சூரியன் பிறந்துவிட்டான் என்பதே. இந்த அவசரத்தைத்தான் மாரிஈன்ற கன்னிப் பிள்ளை என்பதும் அந்த முகூர்த்தத்தை முக்கியமாகவடதுருவத்துக்குக் கிட்ட உள்ளவர்கள் வெகு குதூகலமாகக் கொண்டாடினர். மாணிக்கவாசக சுவாமிகளும் சிவனை "நள்ளிரு

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங் [குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ஷு கார்த்திகை மீ கசஉ வெள்ளிக்கிழமை


## சொல்லெல்லாம் சொல்லாமோ!

—o—

அறிவும் அநுபவமும் செறிந்த ஆற்றல் அமைந்த அரசியல் ஞானியாகச் சிறந்து விளங்கிய இராமநாத வள்ளலின் நினைவு நாள் சென்ற புதன்கிழமை அன்று கொண்டாடப்பெற்றது. அப்பெரியார் அணி பெற அழகுறச் சொற் பெருக்காற்றிச் சுவை தர உரைப்பதில் வல்லுநர் என்ற புகழ் படைத்தவர். அன்னாரின் நினைவு நாளில் அரசியல் மன்றத்திலே தலைமை அமைச்சருக்கும் அங்கத்தவர் ஒருவருக்கும் இடையிலே நிகழ்ந்த சொற்போரை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சொல்லெல்லாம் சொல்லாமோ — பேச்செல்லாம் பேச்சாமோ என்று குறிப்பிட வேண்டியிருக்கின்றது.

அரசியல் மன்றத்து அங்கத்தவர்களும் அமைச்சர்களும் பரந்த நோக்கும் விரிந்த அறிவும் உள்ளவர்களாயிருத்தல் இன்றியமையாது வேண்டப்படுவதாகும். என்னே? அவ்வாறமைந்தவர்களே நீதியைச் செவ்வனே இயற்றக்கூடியவர்கள்.

நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை

என்று பெருநாவலர் பொருத்தமுறப் புகன்றது தமிழகச் சால்பு மட்டுமன்று மனிதகுலப் பண்புமாகும்.

நாவினாற் சுட்டவடு என்றுந் துன்பங்கொடுப்பதாக நின்று வளரும். நாட்டின் நயங்கருதிப்பாராளுமன்றம் புகுந்திருப்பவர்கள் ஆக்க வேலைகளுக் குறுதுணையாகவுள்ள நோக்கங்களைக் கொண்டவர்களாய் அவற்றை நடைமுறையிற் காட்ட வழி வகுக்கும் பொழுதும் ஏனையோரின் ஆதரவைக் கேட்குமிடத்தும் பயன் சார்ந்த பண்புடைய சொற்களையே பயன்படுத்துதல் அத்தியாவசியகம்.

அரசியலில் அறம் வகுத்து அந்நெறி நின்றொழுகிய காந்திப் பெரியாரின அடிச்சுவட்டைப் பின்பற்றிவரும் பாரதவீரர் நேரு பாராளுமன்றத்திலே பலவேறுவேளைகளிற் கோபம் கொள்ளக்கூடிய அளவுக்குக் கண்டிக்கப்பட்டிருந்த பொழுதிலும் இன்னுதன மறந்தும் சொல்லியிருக்கமாட்டார். அந்த அரசியல் மேதாவியே எனது குருஎன்று உலகப் புகழ் பெறுவதற்கு உரைத்து வரும் இலங்கைத் தலைமை அமைச்சர் பயனில்சொற் பாராட்டி நிற்பதினாலே தமது உள்ளக்கிடக்கையை வெள்ளிடை மலைபோல வெளியிடுகின்றார். இதை அவர் எண்ணிப் பார்க்கின்றாரில்லை. தானும்அதுவாகப் பாவிக்கும் வான்கோழிக் கொள்கை பண்புடைமைக்கு வழிகோல மாட்டாது என்பதை மட்டும் ஈழத்து முதல் அமைச்சர் உணர்ந்துவிட்டாற் போதும்.

## உள்ளொளிபரப்பி உய்வோம்

—o—

### கார்த்திகை விளக்கீட்டு விழா

சிவபரம்பொருளுக்குச் சிறப்பாகச் சொல்லப்பெறும் சொரூப லக்கணமென்பது, அருவம் உருவம் அருவுருவம் என்பனவற்றுக்கப்பாற்பட்டதாகும். அத்தகைய ஒரு பொருளைச் சிற்றறிவுடைய உயிர்த்தொகுதி அறிதல் முடியாது. ஆகவே, உயிர்கள்மாட்டுப்பூத்த கருணையால் அருவம், உருவம், அருவுருவம் என்னும் பொதுவியல்புகளையுடையரால் உயிர்களுக்கு அருளுமாறு இறைவன் திருவுளங் கொண்டார்.

அருளுதற்கு அவர் தாங்கிய வடிவங்கள் பலப்பல. அவற்றுள் ஒளிவடிவுக்கு ஒப்பற்ற சிறப்பொன்று கொடுக்கப்படுகின்றது. உயிர் வாழ்க்கைக்கு ஒளியானது இன்றியமையாததாயிருக்கின்றதென்ற பொதுவான உண்மை ஒன்றே ஒளிக்குள்ள பெருமையை எவர்க்கும் இலகுவாய் விளக்கச் செய்யும்.

விரதங்களுள்ளே முதன்மைவாய்ந்தது சிவராத்திரி. சிவராத்திரி உற்பத்தித் தொடர்பிற் புராணக் கதைகள் பலவுள. அவற்றுள் ஒன்று சிவபெருமான் பிரம விட்டுணுக்களுக் கிடையில் ஒளிவடிவாய்த்தோன்றியமையாகும். அவ்வாறு தோன்றி நின்று அருள் செய்தமையே கார்த்திகை விளக்கீட்டுக்கும் காரணமாகக் கூறப்பெறுகின்றது அக்கதையின் சுருக்கம் பின்வருமாறு.

முதன்மை யாருக்குரியதென்ற வாதத்தில் பிரம விட்டுணுக்களிக் கிடையிற் சண்டையொன்றுண்டாயிற்று. சண்டை தீராத நிலைமையில் அவர்களுக்கிடையில் ஒளிவடிவாய்த் தோன்றியருளினார் சிவபெருமான். அதன் அடிமுடி தேடுவாராய் முறையே பன்றியாயும் அன்னமாயும் முயன்றனர் அரி பிரமர். அடியைக்காணுமாறின்றி வருந்தித் திரும்பினார் விண்டு. தாமும் முடியைக் காணுதபோதும் கண்டதாகக் கூறினார் பிரமன். அதனால் அவரைச் சிவபிரான் கண்டித்தார். கர்வமடங்கி இருவரும் அருள்பெற்றுய்ந்த நாளையே விளக்கீட்டுத் திருநாள் குறிப்பதாகும்.

இத்திருநாளில் இறைவன் காட்டியருளியது ஒளியுருவமாகலின் ஒளிகாணும் விளக்குகளை வீட்டிலும் வளவின் பல இடங்களிலும் ஏற்றி இத்திருநாள் கொண்டாடப்படுகின்றது. 'சொக்கப்பனை' என்னும் பெருவிளக்கு திருக்கோயில் முன்றலில் துலங்குகின்றது. இவ்வாறு ஒளியே எங்கும் இடம்பெற்று விளங்குகின்றது.

உடலுயிர்ச் சம்பந்தத்தில் உலகவாழ்க்கைக்கு ஒளி இன்றியமையாததென்பது இன்று எவருமறிந்த உண்மையெனலாம். உடல் வாழ்க்கைக்குப் புற ஒளி எவ்வாறு இன்றியமையாததாகின்றதோ அவ்வாறே அருள் வாழ்க்கைக்கு அக ஒளி இன்றியமையாத

தொடர்ச்சி 5-ம் பக்கம்

## வாழ்க்கை வானில்

— வளர்மதி

### வேலை செய்வதும் விடுவதும்!

எங்கே வேலை நடக்கின்றது. எங்கே வேலை விடப்பெற்றது இந்த ஆராய்ச்சி தான் எவ்விடத்திலும் நடைபெறுகின்றது. வரிசையாக வேலை நிறுத்தஞ் செய்து வந்தால் மாதங்கள் பல இந்த வேடிக்கையிற் சென்றுவிடும். பிரதமர் என் செய்வார். தானும் தொழிலாளர் தோழன் என்று கூறியாவது வரவிருக்கும் வேலை நிறுத்தங்களைத் தடுக்கலாம் என்றால் அந்த வழியும் சரிவரவில்லையே!

### பொதுசனமும் இதிற் சேருமா?

பொதுசனம் நிறுத்தஞ் செய்வது எப்படி என்று ஒருவர் கேட்கின்றார். பொதுசனம் பாராளுமன்றத்துக்கோ உள்ளூர் ஆட்சிச் சபைகளுக்கோ அங்கத்தவர்களைத் தெரிவு செய்யாது விடலாம் அப்படியானல் ஆட்சி நடைபெறமாட்டாது. வேலை நிறுத்தஞ் செய்து விபரீதம் விளைவிப்பதற்கு அரசாங்கம் ஒன்று இருக்காவிட்டால் வேலை நிறுத்தமும் இருக்கமாட்டாது.

### வேலைநிறுத்தஞ்செய்த மாரியும் வேலை செய்கிறது!

பல மாதங்களாக ஒரு துளி மழையும் பெய்யாது வேலை நிறுத்தஞ் செய்த மாரியும் பிரதமரின் சமரசப் பேச்சில் எடுபட்டு நிறுத்தாமல் மழை பொழிகின்றதே!

# வன்னிப் பகுதிக்கு மணி விளக்கு

—:o:—

## தலைசிறந்த தலம் குமாரபுரம்

—o—

(முற்றொடர் — 2)

இந்தப்புராதனஆலயத்தை மீண்டும் திருத்தியமைக்க வேண்டுமென்று பாடுபடுபவர்களில் வவுனியாயப் பிரதிநிதி திரு. செ. சுந்தரலிங்கம் அவர்கள் முன்னணியில் நிற்கின்றார்கள். இவர்கள் தமது சொந்தச் செலவில் அநேக திருப்பணிகள் நிறைவேற்றி வைத்துள்ளார்கள்.

கோயிலையும் அதன்சுற்றாடலையும ஆறவமரப் பார்த்துக் கொண்டு பெரிய தெருவீதியடிக்கு வந்துநின்றோம். அத்தருணம் சைக்கிளில் வந்த ஒருவர் ஈழகேசரி ,ஆசிரியரைக் கண்டதும் "ஏன் பேசாமற் பறையாமல் வந்தீர்கள். ஏற்கெனவே அறிவித்திருக்கக்கூடாதா? மத்தியானம் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வாருங்கள்" என்றார். "நாங்கள் மத்தியானச் சாப்பாட்டுக்கு வேறோரிடத்தில் ஒழுங்கு செய்துவிட்டோம்" என்றார் என்நண்பர். கோயிற் பூசைக்குநேரம் இருக்கிறபடியால் தனியூற்றையும் (தன்னீரூற்று) வந்து பாருங்கள்" என்றார் அவர். எனவே, அவருடன் தனியூற்றுக்குச் சென்றோம். தனியூற்றிலே ஆசிரியராகக் கடமையாற்றும் திருவி. நமசிவாயத்தைத் தரிசியாது தனியூற்றுக்குப் போய் வருவதாற் பிரயோசனமில்லை. வந்த ஊர்வரலாற்றையெல்லாம் அவர்கள் சொன்னார்கள். தனியூற்றிலுள்ள கோயிலில் அநேகபேர் கும்பிட்டுக்கொண்டு நின்றனர். அரசாங்கம் நீர்ப்பாய்ச்சலுக்காகக் கட்டிய அழகிய குளம் கோயிலின் தீர்த்தக் குளமாகவும் அமைந்துள்ளது. அதிலேயே தீர்த்தமாக, தனியூற்றுப் பெருமானுக்குத் தொண்டாற்றும் காரணவாய்ச் சைவக்குருக்களின் விபூதி சந்தனம் பெற்றுக்கொண்டு மீண்டும் குமாரபுரம் வந்து சேர்ந்தோம். இதற்கிடையில் பரமசாமிக்குருக்கள் அவர்களும் கோயிலடிக்கு வந்துவிட்டார்கள் நாங்கள் புனிதமாக வந்தவுடன் குமாரபுரத்தானுடைய அழகொழுகு திருக்கோலத்தைக் கண் குளிரக்கண்டோம். வணங்கினோம் விபூதி பிரசாதம் பெற்றோம்.

பரமசாமிக்குருக்கள் அவர்களைப் பல வருடங்களாக எனக்குத் தெரியும். வெள்ளவத்தையிலுள்ள அரசாங்க உத்தியோகத்தருக்கு, உயர்திரு. சிவங்கருணாலயபாண்டியப்புலவர்கள் சைவசித்தாந்த வகுப்புக்களை நடத்தி வந்த காலத்தில், வகுப்பு முடியுந் தருணத்தில் பரமசாமிக் குருக்கள் அவர்கள் அங்கே வந்துசேர்வது வழக்கம். பல வீடுகளுக்குப் போகாமல் ஒரேமுறையில் சைவஅன்பர் பலரைத் தரிசித்துத் தேவையான உதவியைப்பெற இலகுவான இடம் என்று அவர் கண்டுகொண்டார். இவருடைய தொண்டினை யான் ஏற்கெனவே அறிந்திருந்தேன். ஆனால் நேர்முகமாகப் பார்க்கும் சந்தர்ப்பம் சென்ற வருடந்தான் கிடைத்தது.

**முதலியார் குல சபாநாதன்**

இலங்கைசுதந்திர மடைந்த பின், நம்பௌத்த சகோதரர் விழிப்புடன் சமயத் தொண்டாற்றி வருகின்றனர். சைவர்களும் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம்முதலிய புராதன தலங்களை மீண்டும் திருத்தியமைப்பதில் ஈடுபட்டுள்ளனர். எனினும் ஆமை வேகத்திற்றான் அவர்களுடைய முன்னேற்றம் நகர்ந்து செல்கின்றது. என்பதை வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகின்றேன். சுயநலப்பற்றும், விளம்பர விருப்பமும் இல்லாத தலைவர்களும் தொண்டர்களும் இந்தச் சமூகத்தில் அருகியிருப்பது குறையென்றே கருதுகின்றேன்.

மாந்தைமா நகரம் சிறந்த துறைமுகமாக இருந்த காலத்தில், அதாவது விஜயன் என்பவன் இந்தியாவிலே பிறப்பதற்குப் பல நூற்றூண்டுகளுக்கு முன்னரே (இவன் இலங்கைக்கு வந்தான் என்பதே ஐயத்திற் கிடமானது) திருக்கேதீஸ்வரம், சிறந்த தலமாக விளங்கியது. அவ்வாறே வன்னிப்பகுதியில் குமாரபுரம், வட இலங்கையில்வல்லிபுரம் ஆதிய தலங்கள் பெரும் புகழுடன் விளங்கின. இத்தலங்களுக்குரிய பெயர்களே இத்தலங்கள் அமைந்துள்ள பட்டணங்களுக்கு வழங்கப் பட்டிருப்பதை நோக்குமிடத்து, இவை பண்டைப்புகழ் வாய்ந்த தலங்கள் என்பது நன்கு பெறப்படும். திருக்கேதீஸ்வரம், குமாரபுரம், வல்லிபுரம் ஆதியாம் பெயர்களை நோக்குக. புரம் என்னுஞ்சொல் பெரும்பாலுந் தலைநகரையேமிறிக்கும். அநுராதபுரம். புலஸ்திபுரம் முதலிய பெயர்களைப் போலவே குமாரபுரம் எனும் பெயரும் அமைந்துள்ளது.

குமாரபுரத்திலிருந்த முருகன் ஆலயம் போத்துக்கீசர் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திற் தரைமட்ட மாக்கப்பட்டது. இத்தலத்தில் இடிந்து கிடக்கும் கட்டடங்களையும தூண்களையும் நோக்குமிடத்து, இது பண்டைக் காலத்தில் வன்னிப்பிரதானிகளும் குடிகளும் வந்துவணங்கிய பெரிய சுப்பிரமணிய தலமாய் விளங்கியதென்பது நன்குபுலனாகும். இங்கே கோயில் கொண்டெழுந்தருளிய மூர்த்தியின்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திசாதன முறை

இது
கர்மயோகம், பக்தியோகம்,
இராஜயோகம், ஞானயோகம்
என்பனவற்றைத்
தெளிவாக விளக்குவது
20 அத்தியாயம்,
264 பக்கம்.

விலை ரூபா 1/=

அதிபர் :
"இந்துசாதனம்"
யாழ்ப்பாணம்.

இந்துசாதனக் கல்விக் கதிர்

இல. 5

சைவசமயம், கல்வி
இலக்கியம், கணித விஞ்ஞானம்

இந்துசாதன இளைஞர் பகுதியாகப்
பட்சந்தோறும் வெளிவருவது

ஆசிரியர்க்கும்
ஆசிரிய மாணவர்க்கும் உரிய
அரிய நூல்!
படிப்பிக்கும் முறை
களும் விதிகளும்

சைவத் திருவாளர்
சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
B. A. அவர்கள் இயற்றியது
புதுக்கிய இரண்டாம்பதிப்பு.
விலை: ரூபா 3-00
அதிபர்
"இந்துசாதனம்"
யாழ்ப்பாணம்.

# திருக்கார்த்திகைச் சிந்தனை

( தொகுப்பு : மா. பீதாம்பரன் )

தேவாரம்

இருநிலனுத் தீயாகி நீரு மாகி
இயமான னுயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி ருகி
ஆகாய மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணு மாணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையா யின்ருகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே.

ஓசை யொலியெலாம் ஆனுய் நீயே
உலகுக் கொருவனுய் நின்ருய் நீயே
வாச மலரெலா மானுய் நீயே
மலையான் மருகனுய் நின்ருய் நீயே
பேசப் பெரிது மினியாய் நீயே
பிரானு யடியேன்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெல்லா மானுய் நீயே
திருவைய றகலாத செம்பொற் சோதீ.

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற வெளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரதம் எல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் ருனே.

கண்ணுய் ஏழுலகும் கருத் தாய அருத்ததமுமாய்
பண்ணு ரின்தமிழாய்ப் பர மாய பரஞ்சுடரே
மண்ணுர் பூம்பொழில்சூழ் மழ பாடியுள் மாணிக்கமே
அண்ணு நின்னையல்லா லினி யாரை நினைக்கேனே.

ஆதிய ணுதிரையன் னயன் மாலறி தற்கரிய
சோதியன் சொற்பொருளாய்ச் சுருங் காமறை நான்கினையும்
ஓதிய னும்பர்தங்கோ னுல கத்தினு ளெவ்வுயிர்க்கும்
நாதிய னம்பெருமா னண்ணுமூர்நனி பள்ளியதே.

திருவாசகம் - அருட்பத்து

சோதியே சுடரே சூளொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்ருய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே.

வானுகி மண்ணுகி வளியாகி ஒளியாகி
ஊனுகி யுயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனுகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானுகி நின்ருயை என்சொல்லி வாழ்த்துவனே.

திருமந்திரம்

சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற
ஆதிக்கண் ஆவ தறிகிலர் ஆதர்கள்
நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன் என்று
பேதித் தவரைப் பிதற்றுகின் ருரே

— திருமந்திரம்,

இதன் பொருள் : "ஒளி விடுகின்ற பேரொளிப் பிழம்பாகிய சிவம், பிரமன் விஷ்ணு உருத்திரன் என மூன்றையும் அவற்றுடன் சதாசிவன் மகேசன் கூட ஐந்தாகவும் நின்ற தொன்னிலைக்கண் அவரால் அடையும் பயனை அறியமாட்டாதவர்களாகிய மூடர்கள் முறையாக உருத்திரன் திருமால் பிரமன் என்று வேறுபடுத்திப் பிதற்றுகின்றனரே; அவரறிவு இருந்தபடி என்னே!

['சோதித்த என்பது ஒளியென்னும் பொருளைத் தருகின்ற சோதி என்னும் பெயர்ச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சம்; ஒளியை உடைய என்பது பொருள்.]"

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெரு மான்என் றிறைஞ்சியும்
ஆத்தஞ்செய் தீசன் அருள்பெற லாமே.

இ — ள் : "இறைவனுடைய எல்லையற்ற குணங்களில் இயன்றவற்றை எடுத்துக்கூறி வாழ்த்தவல்ல பூர்வ புண்ணியம் உடையவர்கள் மனத்துள் விளங்கும் சோதிப் பொருளை நிர்மல சொரூபியை செம்மனத்துள் இருந்து திளைக்கின்ற தேவனைத் தோத்தரித்தும் எம் தலைவன் என்று வீழ்ந்து வணங்கியும் அன்பு செய்தும் வரின் அவனருளைப் பெறலாம்" என்றவாறு.

திருப்புகழ்

| | |
|---|---|
| இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரும் | —உறுகோளும் |
| இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் | — வளமேவும் |
| விரிந்த நாடும் குன்றமு நிலையென | — மகிழாதே |
| **விளங்கு தீபங் கொண்டுனை வழிபட** | **—அருள்வாயே** |
| குருந்தி லேறுங் கோண்டலின் வடிவினன் | —மருகோனே |
| தரங்க லாவுங் குன்றுறை [illegible]மகள் | —மணவாளா |
| திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு | —புலவோனே |
| சிவந்த காலுந் தண்டையு மழகிய | —பெருமாளே. |

கல்விப் பொதுத்தேர்வு இலக்கியம்

# கும்பகருணன் தன் அண்ணனுக்குக் கூறிய அறிவுரை

( பதிப்புரிமை )

போர்க்கோலஞ் செய்த காரணத்தை இராவணன் தன் தம்பிக்குக் கூறியவுடன், நெடுங்காலம் உறங்கிக்கிடந்த அவன் ஒன்றனையும் அறியாதைலின், அவன் மனம் திடுக்கிட்டான். உள்ளம் குமுறிற்று. இராவணனொருவன் செய்த தவறுதலினுலே அவனோடு இலங்கையும் அரக்கரனைவரும் அண்மையில் அழிந்தொழிவது உறுதி என்பதனை உணர்ந்தான்; தன்னுலானவரை அறிவுரை கூறி அனைவரையும் அழியாமற் காக்க முயன்ருன். ஆதலின் பின்வருமாறு கூறலானுன்:

"அண்ணு, நான் எண்ணியவாறே கொடிய போரும் தொடங்கி விட்டதோ! அக்கற்புக் கடவுளின் துயர் இன்னும் தவிரவில்லையோ! உன் பெரும் புகழ் போயிற்ரே! இலங்கை முழுதும் அழியுங் காலமும் கிட்டிவிட்டதோ!

'பல அறிவுரைகளைக் கேட்டும், திருஷ்டி விஷம் போன்ற சீதையை நீ இன்னும் சிறையிலிருந்து விட்டிலையோ? இது தீவினையின் பயனேயாகும்- ஒருவன் உலகினைக் கல்வி எடுப்பினும் எடுக்கலாம்; அதற்கு எல்லை காணினும் காணலாம். ஆயின் இராமனெடு பொருது வெற்றி காண்டலும் அவன் தேவியைத் தீண்டலும் எவராலும் ஒருபொழுதும் செய்ய இயலாத செயல்கள். ஆதயின் இவ்விரண்டு எண்ணத்தையும் நீ இப்பொழுதே விட்டொழிக்க வேண்டும்.

"உன் வலிமையும், நம் குலப்பெருமையும் குலைவதற்குக் காரணம் உன் தீச்செயலேயாகும். அறத்தினின்றும் மாறுபட்ட உனக்கு வெற்றியும் விளையுமோ? உன் தீச்செயலுக்கும் இத் துன்பங்களுக்கும் பழிக்கும் காரணம் உன் தீய இனமே. நீ பெரியார் சிலரைத் துணையாகக் கொண்டிருப்பினும், அவர் சொற்படி செய்யாமல், சிற்றினத்தோடுசேர்ந்து அறிவு திரிந்து அவர் கூறுவதைக் கேட்டுப் பாவங்களைச் செய்வதனுல், நீ இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் இழப்பது உறுதி. பிறர்மனைவிழைதல் என்னும் பெரும் பாவமொன்றே உன் பெருமை யெல்லாவற்றையும் இழப்பித்துச் சிறுமை பலவற்றையும் எய்துவிக்கும். அதனுல், நீயே உன்னை அழித்துக்கொள்கிருய். உன் உற்ருரனைவரும் அழிவதற்கும் நீயே காரணமாயிருக்கின்ருய். அன்றியும், உன்னுல் சிறைப்பட்டிருக்கும் பகைவரனைவரும் விடுதலை பெறுதற்கும் உன் செயலே காரமாய் இருக்கின்றது. இனி, உனக்கு உய்யும் வழி இல்லை,

"நீ அறத்தினுல் வலிமை, செல்வம், ஒளி எல்லாம் பெற்று உயர்ந்தாய். இப்பொழுது அதனை மறந்தாய்' அதுவும் உன்னை மறந்தது. உன்னை நீயே தாழ்த்திக்கொள்வாயாயின் உன்னை உயர்த்துவார் யார்? அறம் பிழைத்தோர்க்கு அறமே கூற்ருகுமே! அறத்தை மறம் வெல்லுமோ? உன் பகைவரோ அறத்தினின்றும் தவருதவர்; உள்ளம், உரை செயல் என்னும் முக்கரணத்தாலும் தூய்மைவாய்ந்தவர். நாமோ அவரினும் முழுதும் மாறுபட்டுள்ளோம்! அறமே வெல்லும், பாவம் தோற்கும் என்பது நீ அறியாததோ?

"சீதை இன்னும் சிறையில் இருப்பதொன்றே நாம் அழிவுறற்குப் போதும். அவள் கற்புத் தீயொன்றே அனைவரையும் சுட்டெரித்துவிடும்! இராமனிடம் வாலியைக் கொன்ற அம்பும் உளது. அவ்வீரனுக்குத் துணையாக வலிய குரங்குப் படையும் உளது! அவ்வம்புக்கு இலக்காக நாமும் உளேம்! சிறையிருக்குஞ் சீதை, இராம பாணம், குரங்குப்படை என்னும் மூன்று எமன்கள் இருக்கும் பொழுது நாம் உயிர்தப்புவதும்உண்டோ!

"இனிச் சில உரைக்கின்றேன். அவை உனக்கு உறுதி பயக்கும் என்று உணர்ந்துகொள்வாயாயின், நீ நீடுவாழலாம். இன்றெனில் இறுதி பெறுவது உறுதி. அண்ணு, இன்றே இராமனிடம் அவன் தேவியைச் சேர்த்து, அவன் திருவடிகளில் விழுந்து வணங்க வேண்டும்; அறநெறியையே அறிந்த விபீஷணனோடுஅன்புடன் அளவளாவவேண்டும். இவையே பிழைக்கும்வழி. இவை உனக்கு உடன்பாடல்ல எனின், மற்ருென்று செய் இப்பொழுதே நம் படைகளை ஒருசேரக் கொண்டு போய், பகைவரைத் தாக்கி வெற்றிகாண முயல வேண்டும். அவ்வாறன்றி, சிறு சிறு படைகளைப் பொரவிடுத்து அவை ஒவ்வொன்ருக அழிந்து போவதைக் கண்டு, வருந்துவது செய்யத் தக்கது அன்று"— என்று பல காரணங்களைக் காட்டி அறிவுரை கூறினுன்.

வே. வே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளியுருவில் இறைவழிபாடு

## தொல் கார்த்திகையாம் விளக்கீட்டில் தையலாரின் பெரும் பணி

தேவாரம் பாடிய செல்வக் குழந்தை செய்தருளிய அற்புதங்கள் பல. அவற்றுள் ஒன்று திருமயிலாப்பூரிலிருந்த சிவநேசர் என்னும் வணிகரின் மகளாகிய பூம்பாவையின் எலும்பைப் பெண்ணாக்கியது. (அதன் சுருக்கம் வருமாறு:)

திருமயிலாப்பூரில் சிவநேசர் என்னும் வணிகர் மகள் பூம்பாவை பூக்கொய்யுங்கால் விடந்தீண்டி இறந்தாள். தந்தையார் அவளது என்பினைக் குடத்திற் சேமித்து வைத்திருந்தார்.

திருவொற்றியூரிலே ஞானசம்பந்தர் வந்திருப்பதைக் கேள்வியுற்ற சிவநேசர், மயிலையிலிருந்து திருவொற்றியூர்வரை பந்தல் போடச்செய்து, அடியார்களுடன் சென்று சம்பந்தரை வணங்கித் திருமயிலைக்கு வருமாறு வேண்டினர். முத்துச் சிவிகையிலே பிள்ளையார் புறப்பட்டுவந்து திருமயிலாப்பூரை அடைந்தார். பூம்பாவையின் என்பு வைக்கப்பட்டிருந்த குடத்தைத்திருக்கோயிலின் முன் கொண்டுவந்து வைக்கச் செய்தார். இவ்வற்புதத்தைக் காண மக்கள் திரண்டு வந்தனர்.

பிள்ளையாரும் இறைவன் திருவருளை நினைந்து "மக்கள் அடைதற்குரிய பயன் சிவனடியார்களை அமுது செய்வித்தலும் அவர்தம் திருவிழாப் பொலிவு கண்டு மகிழ்தலுமேஎன்பது உண்மையானல் **பூம்பாவாய்** நீ உலகர் முன் உயிர்பெற்று வருக" என்பார் 'மட்டிட்ட புன்னையங்கானல்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளினுர். பூம்பாவை பன்னிரு வயது உடைய பெண்மணியாய்த் தோன்றினுள்.

இப்பூம்பாவைப் பாட்டில் சைவத்திருவிழாக்கள் அழகாகக் குறிக்கப்பட்டுள்ளன.

"நெய்ப்பூசும் ஒண்புழுக்கல்
நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணுதே
போதியே பூம்பாவாய்"

என்று ஒரு பாட்டிற் கூறியருளியுள்ளார். ஒவ்வொரு பாடல்களிலும் திருவிழாக்கள் குறிக்கப்பட்டுள்ளன.

இறைவனை ஒளியுருவில் வழிபடும் திருக்கார்த்திகை விழா மிகவும் தொன்மை வாய்ந்தது. சங்கத் தமிழ் நூல்களிலும் சீவக சிந்தாமணியிலும், மற்றும் நூல்களிலும் இதன் சிறப்புக் குறிக்கப்பட்டுள்ளது.

திருமயிலாப்பூரிலிருந்த சிவநேசர் என்பாரின் புதல்வி பூம்பாவையின் எலும்பினைப் பெண்ணாக்கிய அற்புதஞ் செய்த பொழுது திருஞானசம்பந்தர் பாடியருளிய தேவாரப் பதிகம் **பூம்பாவைப் பாட்டு**. இதில் ஆளுடைய பிள்ளையார் திங்கள்தோறும் கொண்டாடப்பட்ட திருவிழாக்களைக் குறித்தருளியுள்ளார். திருக்கார்த்திகை "தொல்கார்த்திகை நாள்" என்று கூறப்பட்டுள்ளது. இதனுல் இதன் தொன்மை விளங்குகின்றது.

மேலும் இத்தேவாரத்திலேயே,

"தையலார் கொண்டாடும், விளக்கீடு காணுதே போதியோ பூம்பாவாய்"

என்று விளித்துக் கூறியுள்ளார். இதனுல் இவ்விழாவில் மனையுறை மகளிர்க்கே பெரும்பணி உண்டென்பதும் விளங்குகின்றது.

நிலம், நீர், தீ, வளி, விசும்பு, ஆன்மா, ஞாயிறு, திங்கள் என்பன சிவபெருமானின் அஷ்ட மூர்த்தங்களாகிய எண்பேருருவங்கள். நிலம், நீர், தீ, வளி, விசும்பு(பிருதுவி. அப்பு, தேயு, வாயு, ஆகாசம்) என்பன ஐம்பெரும்பூதங்கள். இவையாலான லிங்கங்களைப் பஞ்சலிங்கம் என்பர். ஒவ்வோர் இலிங்கத்துக்கும் ஒவ்வோர் சிவஸ்தலமாக ஐந்து சிவஸ்தலங்கள் உண்டு.

ஒளிஉருவில் வழிபடுதற்குரிய தேயுலிங்கத்தை உடையது திருவண்ணமலை. மற்றும் ஸ்தலங்கள்:

ஆகாயம் - சிதம்பரம், வாயு - காளத்தி, தேயு - திருவண்ணமலை, அப்பு - திருவானைக்கா, பிருதுவி - திருவாரூர்.

காலமு நாள்களூழி
படையாமுனேக
வுருவாகி மூவருருவிற்
சாலவு மாகிமிக்க
சமயங்களாறி
னுருவாகி நின்ற தழலோன்
ஞாலமு மேலைவிண்ணே
டுலகேழுமுண்டு
குறளாயோ ராலினிலைமேற்
பாலனு மாயவற்கோர்
பரமாயமூர்த்தி
யவனும் நமக்கோர் சரணே
தேவாரம்

காலவரம்பினைக் கடந்து நிற்பவனும், எல்லாச் சமயங்கட்குந் தலைவனுமாகிய இறைவனை "தழலோன் என்றுகுறித்தருளியுள்ளார் திருநாவுக்கரசு நாயனுர். "தீபமாகிய சிவனே போற்றி" என்றருளினர் பட்டினத்தடிகளார்.

எதிர்வரும் கார்த்திகைத் திருநாளிலன்று சிவபெருமானை ஒளி உருவில் வணங்குவோமாக.

## சைவசமயக் கல்வி

(முற்றொடர்)


### தில்லையை அடைதல்

செல்லும் வழியெல்லாம் கொன்றை பூத்துச் சிவமணம் கமழ்ந்தது. பல மலர்ச் சோலைகளைக் கடந்து தில்லையின் எல்லையை அடைந்தார். கை கூப்பி வணங்கி வீதிகளைக் கடந்து திருக்கோயிலை அடைந்து வலம் வந்து பொன்னம்பலத் திருக்கூத்தன் எதிரே நின்றுர். நடராசர் தோற்றம் ஞானசிரியர் திருக்கோலமாகக் காட்சி அளித்தது. தம்வசம் இழந்து ஓவியம் போல் அசைவற்று நின்றுர். உணர்வு பெற்று வணங்கினுர். சிவகாமியம்மையாரைப்போற்றி வெளியில் வந்து திருவாசகம் பாடிக்கொண்டே தெருவிற் சென்றுர். கீர்த்தித்திரு அகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திரு அகவல் முதலியனவும் பெண்கள் இறைவனைப் பாடுவதாகத் திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருத்தோள்நோக்கம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல், அன்னைப்பத்து, முதலியவைகளும் அங்கு பாடப்பெற்றன. திருக்கோத்தும்பி, தசாங்கம், குயிற்பத்து, அச்சப்பத்து ஆகியவற்றையும் பாடித் தில்லைக்கு வெளியே தழைக் குடிசை கட்டி அதிலே தங்கிச் சிவயோகம் புரிந்து வந்தார்.

### புத்தரை வாதில் வெல்லுதல்

எப்பொழுதும் 'பொன்னம்பலம்' 'பொன்னம்பலம்' என்று சொல்லிக் கொண்டேயிருக்கும் சிவனடியார் ஒருவர் ஈழநாடு சென்றிருந்தார். அங்கும் அவ்வாறே சொல்லிக் கொண்டிருந்தார். புத்தமதத்தைச் சேர்ந்த அந்நாட்டரசன் அவரைத் தன்னிடம் அழைத்துப் பொன்னம்பலம் என்பது யாது என வினவினன். 'சோழநாட்டிலிருக்கும் புலியூரென்னும் தலத்தில் இறைவர் திருக்கூத்துச் செய்யுமிடம் பொன்னம்பலம். அதை ஒருமுறை தரிசித்தோர் வீடுபேறடைவர். பொன்னம்பலம் என்று கூறின் தீயவரும் நலம் பெறலாம். ஆதலின் நான் அவ்வாறு கூறுகிறேன் என்று அடியவர் கூறினுர்.

(வரும்)



## கல்வி விளக்கம்

### ஆங்கிலம் எவ் வகுப்பில் ஆரம்பமாகலாம்?

பல்கலைப் பயிற்சிக்கு, இப்பொழுது ஆங்கில மொழி அறிவு இன்றியமையாதவொன்று எனல் மிகையாது. 'புத்தம் புதிய கலை"களிலே ஆற்றல் பெறுதற்கு ஆங்கில மொழியறிவு பெரிதும் பயன்படும். ஆங்கில மொழியல்லாத பிற ஐரோப்பியமொழிகள் மூலம் 'புத்தம் புதிய கலை' களைப் பயிலலாம். எனினும், ஆங்கில மொழி பல ஆண்டுகளாக நம் ஆட்சி மொழியாகவும் பல்கலைக் கல்விமொழியாகவும் விளங்கியது; அஃது எங்கட்கு ஓர் அயல் மொழியாகவும் துணை மொழியாகவும்இருக்கின்றது; பல்கலை அறிவு பெற விரும்புவோரும், பல்கலைக் கழகக் கல்வி பெற விரும்புவோரும் ஆங்கில மொழி பயிலுதல் சாலவும் நன்றே

அன்றியும், ஆங்கில மொழியை 'உலக மொழி' என்றும் கூறலாம். வணிகத்துறைக்கும், அயல்நாட்டுத் தொடர்புக்கும ஆங்கிலம் வேண்டியதாகின்றது. உலகின் எப்பாகத்துக்கும் ஆங்கிலத்திற் கடிதம் எழுதலாம். ஆதலின், பல்கலை அறிவினை விரும்பாதவர்க்கும் ஆங்கிலம் பயனுள்ள மொழியாகின்றது. ஆதலின், ஆங்கிலத்தைக் கலாசாலைகளில் இரண்டாவது மொழியாகப் படிப்பித்தல் பெரிதும் விரும்பத் தக்கது.

இம் மொழியினை எவ் வகுப்பினில் ஆரம்பிக்கலாம்? இப்பொழுது வழக்கிலுள்ளபடி ஆங்கிலம் மூன்றும் வகுப்பில் ஆரம்பிக்கப்படுகின்றது. தாய்மொழி ஆற்றல் நன்கு அமையுமுன் இரண்டாவது மொழி ஒன்றனைப் புகுத்துதல் புத்தியாகாது.

பத்தாம் வயதின் பின்னரே (10+) இரண்டாவது மொழி ஆரம்பிக்கப்படத் தக்கது என்பது உளநூலோர் கண்ட முடிபு.

'சுதந்திரம், பிறந்து தாய்மொழி வழிக் கல்விச் சட்டம் வருமுன், ஆங்கிலமயமே அறிவென எண்ணிய காலத்தில், 'ஆங்கில உச்சரிப்பே அறிவு, ஆங்கிலந் தெரியாதார் அறிஞர் அல்லர்' என்னும் போலி எண்ணம் பரவியிருந்தகாலத்தில், 'எப்போ என் பிள்ளை ஆங்கில பாடசாலைக்குச் செல்லும்? என்னும் எண்ணம் பெற்றூருள்ளத்து மூண்டு நின்ற காலத்தில், மூன்றும் வகுப்பில் ஆங்கிலம் ஆரம்பிக்க வேண்டும் என்னும் எண்ணம் நிலவியது. பாலர் வகுப்பிலேயே ஆங்கிலம் ஆரம்பிக்கும் பாடசாலைக்கே பிள்ளைகளை அனுப்புதல் சிறந்த 'நாகரிகம்' என்று எண்ணிய காலமும் அதுவே.

இக்கால நிலையினையும், ஆங்கிலத்தின் பயனையும் நோக்குமிடத்து, ஆங்கிலத்தினை ஆறும் வகுப்பினில் (கனிஷ்ட பாடசாலை முதலாம் வருட வகுப்பில்) ஆரம்பித்தலேநன்று. அங்ஙனம் ஆங்கிலம் பயிலத் தொடங்கும் மாணக்கர் ஆற்றல் வாய்ந்த பயிற்றப்பட்ட ஆசிரியரால் முறைப்படி பயிற்றப்பட்டால் ஐந்தாண்டு முடிவில் கல்விப் பொதுத் தேர்தல் (B பிரிவுக்குரிய) ஆங்கில அறிவைப் பெறுவர் என்பதற்கையமில்லை. பிள்ளைகட்கு ஆரம்பத்தில் ஆங்கிலம் படிப்பிக்கும் ஆசிரியர்கள் (ஆசிரியைகள்) அநுபவமும் ஆற்றலும் வாய்ந்தவர்களாயிருத்தல்வேண்டும்.

கல்வி முறை இந்தியாவிலும் நன்கு ஆராயப்பட்டு வருகின்றது. ஐந்தாம் வகுப்பிலேயே ஆங்கிலம் ஆரம்பிக்கத் தக்கது என்பது அவர்கள் கண்ட முடிபாகும்.


பாடசாலைகளுக்குரிய
**தினவரவு இடாப்பு**
அழகாக அச்சிடப்பட்டுள்ளது
**விலை ரூபா 1-50**
அதிபர்
இந்துசாதனம்


## அணிந்துரை அரங்கம்

"ஈழதேவி"

திங்கள் வெளியீடு. ஆசிரியர்: பண்டிதர் த. சுப்பிரமணியம். களுத்துறைத் தமிழ்க் கழக வெளியீடு. சிலம்பு 1. பரல் 1, 2.

புரட்டாதி, ஐப்பசி வெளியீடுகள் அழகாக வெளியிடப்பட்டுள்ளன. இவை பலர்க்கும் பயன்படும் விஷயங்களைக் கொண்டுள்ளன. அறிஞர் பலரின் அரிய கட்டுரைகளும் பாடல்களும் உள்ளன. சந்தா விபரம் ஒரு வருடம் ரூபா 4.

## விண்ணப்பப் பத்திரம்

**'இந்துசாதன இளைஞர் கழகம்'**

இந்துசாதனக் காரியாலயம்
**யாழ்ப்பாணம்**

அன்பு கூர்ந்து என்னை 'இந்துசாதன இளைஞர் கழகத்திற் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

முழுப்பெயர்.................................................
வகுப்பு ........பிறந்த திகதி............................
விலாசம் .................................................
.................................................
கையெழுத்து .................................................
திகதி .................................................
தந்தையாரின் /
ஆசிரியரின் கையெழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சைவபரிபாலன சபையின் பிரேரணைகள்

## மந்திரிமார்களுக்கு அனுப்பப்பட்டன

பின் வரும் பிரேரணைகள் 10-11-57ல் சபைத் தலைவர் திரு. த. முத்துச்சாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்த நிருவாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. பிரேரணைகளின் பிரதிகள் கலாசார மந்திரிக்கும், முதல் மந்திரிக்கும், இலங்கையிலுள்ள இந்திய தூதுவருக்கும் உள்நாட்டு மந்திரிக்கும் அனுப்பப்பட்டன.

(1) இந்து சமயக் கரும ஆலோசனைச்சபை அமைப்புத் தொடர்பிலெழுந்த மாற்றங்கள் காரணமாய் குறித்த சபையின் தலைமைக் காரியாலயம் யாழ்ப்பாணத்திலிருக்க வேண்டுமென்றும் அச்சபையின் அங்கத்தவர்கள் சைவக் குருமாரின் சங்கங்கள் உட்பட கணிக்கப்பெற்ற இந்து சங்கங்களின் பிரதிநிதிகளாயிருந்து கலாசார மந்திரியின் அங்கீகாரம் பெற்றவர்களாயிருக்கவேண்டுமென்றும் இச்சபை திடமாகக் கருதுகின்றது.

(2) இலங்கையில் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்துக்கொடுக்க வேண்டுமென்று இச்சபை முதல் மந்திரியைக்கேட்டுக்கொள்ளுகின்றது. அத்துடன் இப்பிரேரணையின் நோக்கத்தை யடைதற்குச் செய்யும் முயற்சிகளில் இச்சபையுடன் ஒத்துழைக்குமாறு அரசியற் சபைகள் ஏனைய சபைகள் ஆகிய எல்லாவற்றையும் இச்சபை கேட்டுக்கொள்ளுகின்றது.

(3) இலங்கை இந்துக்கள் தென் இந்தியாவில் அமைத்துள்ள சமய பரிபாலன கல்விப் பரிபாலன நிலையங்களின் சொந்தக்காரருக்கு அல்லது அவர்களின் வழித்தோன்றல்களுக்கும் அல்லது அவர்களால் நியமிக்கப்பெற்றவர்களுக்கு இடையிடையே போய்ப் பார்வையிடுதற்கு மாத்திரமன்றித் தென் இந்தியாவில் சிறிதுகால வாசஞ் செய்தற்கும் விசா வழங்குமாறு இந்திய அரசாங்கத்தை இச்சபை கேட்டுக்கொள்ளுகின்றது.

(4) இந்தியாவுக்குப் பிரயாணஞ் செய்ய 'விசா' வழங்குதற்கு ஓர் காரியாலயத்தைத் திறக்கும்படி இந்திய வெளிநாட்டுக்கரும அமைச்சுக்கு ஆலோசனை கூறுமாறும் இந்துக்களின் இந்த நியாயமான உரிமைக் கேள்வியை விரைவில் நிறைவேற்றச் செய்யுமாறும் இலங்கையிலுள்ள இந்திய தூதுவரை இச்சபை கேட்டுக்கொள்ளுகின்றது.

(5) மகாசிவராத்திரி இந்துக்களுக்கு மிக முக்கியமான நாளாயிருப்பதால் அது ஓர் பகிரங்க விடுதலை நாளாக வேண்டும்; மகாசிவராத்திரி நாளோடு தைப்பொங்கல் நாளும் ஆடி அமாவாசை நாளும் தொடர்ந்து பகிரங்க விடுதலை நாட்களாயிருத்தல் வேண்டும். பௌத்த புது வருட நாளாகிய ஓர் பகிரங்க விடுதலை நாளில் வருதலால் இந்து புதுவருட நாள் குறிப்பிடப்படவில்லை.

---

## உள்ளொளி பரப்பி உய்வோம்

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

தாகின்றது இது இல்லாதிருந்தமையாலேயே அரிபிரமர்க்கிடையிற் சமருண்டாயிற்று. இதைப்பெற்றதும் உண்மையுணர்ந்து இன்புற்று வாழ்ந்தனர். எனவே கார்த்திகை 4-ந்திகதி வெள்ளிக்கிழமைவரும் இத்திருநாளைக் கொண்டாடி, நான் எனது என்னும் செருக்கை நீக்கி இறைவன் திருவருளின் சிறப்பையுணர்ந்து இன்புற்று வாழுவோமாக.

கோட்டை அடையாள
இரட்டைப் பீலி
வீட்டு ஓடுகள்

திறமானதிலும் திறமானது

உறுதிக்கும் நம்பிக்கைக்கும் ஒப்பில்லாதது. பெருமழையில் மிகச் சிறிய அளவுநீரை உறிஞ்சுகின்றது. மழை காலத்தில் தண்ணீர் சிறிதாயினும் ஒழுகமாட்டாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதை உபயோகிக்கும் பெருந்தொகையினரின் அபிப்பிராயத்தைக் கேட்டறிக,

நீண்டகால உபயோகத்தில்
திறமானபொருளே மலிவானதாகும்

வில்லியம் மேதர் சன்ஸ்
சோல் ஏஜன்ஸ் யாழ்ப்பாணம்

# பொன் இராமநாத வள்ளலை பொன்னேபோற் போற்றுவோம்

## விவேகானந்த சபையில் நினைவுநாள் விழாவில் அஞ்சலி

இலங்கையின் பாரம்பரிய அரும்பெறற் செல்வத்துட் செல்வமாயமைந்திருக்கின்றது இராமநாத வள்ளலின் நினைவு. இந்நாட்டின் மக்கள் யாவருக்கும் சாதி சமய பேதமில்லாத வகையிலே என்றென்றைக்கும் ஊக்கமளிக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது இறைவழிபாட்டிற் சிறந்த சைவத்தொண்டரும் பரோகாரியுமான இராமநாத வள்ளலின் வாழ்க்கை என்று கொழும்பு விவேகானந்த சபையில் நடைபெற்ற நினைவுநாள் விழாவிலே தலைமைவகித்துப் பேசிய திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து பேசும்பொழுது திரு. சிவசுப்பிரமணியம் அவர்களும் இராமநாத வள்ளலின் வள்ளற் றன்மையையும் பின்வருங் காரியங்களை நன்குணர்ந்து தொண்டுசெய்யுந் தீர்மானத்தையும் மகாத்மாகாந்தி சுட்டிக்காட்டி இலங்கைமக்கள் இராமநாதவள்ளலுக்கு என்றும் நன்றியுடையவர்களாயிருத்தல்வேண்டும் என்று கூறியதை நினைவுக்கழைத்தார்.

கொழும்பிலே கொச்சிக்கடையிலே ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரத்தின் நூற்றுண்டு விழாவுடன் இராமநாத வள்ளலின் நினைவு நாளும் ஏககாலத்தில் அமைந்ததும் பொருத்தமானதென்று மேலும் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள்.

---

### சமயப்பாடசாலைகள்பற்றி பௌத்த சபைக் கருத்து

---

ஓர் பாடசாலையில் அப்பாடசாலை அதிகாரிகளின் சமயமல்லாத சமயத்தவராய் 51வீத மாணவர் படிப்பார்களேயானால் அப்பாடசாலையை அரசாங்கம் உடனே ஏற்று நடத்த வேண்டுமென்று பௌத்த மத ஆராய்ச்சிச் சபையார் அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியிருக்கின்றனர்.

## வன்னிப் பகுதிக்கு மணி விளக்கு

—0—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திருநாமம் சித்திரவேலாயுதர் என்பது. அந்நியர் கோயிலை அழிக்கப் போகின்றனர் என்பதை யறிந்த சஞ்சலமுற்ற சைவ அன்பர்கள் சித்திரவேலாயுதமூர்த்தியை, அந்நியர் தீண்டி அழிக்கக்கூடாது என்று விரதம் பூண்டவர்களாய், நன்காலோசனை செய்து ஒரு கட்டுமரத்தை ஒழுங்குசெய்து, அதன்கண் மூர்த்தியை ஏற்றி, இரவிரவாக இரகசியமாகவே வட இலங்கையிலுள்ள பொலிகண்டிக் கடற்கரையில் இறக்கி, அந்தக் கடற்கரைக்கு அண்மையிற்றானே ஒரு சிறு கோயிலைக்கட்டி, அங்கேயும் இரகசியமாகப் பூசித்து வந்தார்கள். பொலிகண்டிக்கிராமம் சித்திர வேலாயுதசுவாமி கோயில்கொண்ட காலந் தொடக்கம் கந்தவனம் எனவும், கந்தவனக்கடவை எனவும் வழங்கப்படலாயிற்று. இந்தக் கோயிலுக்கு அண்மையிற்றான் சைவசமயத்துக்குஅளப்பருந்தொண்டாற்றிய சைவப் பெரியார் திரு. சு. சிவயாத சுந்தரம்பிள்ளை அவர்கள் தமது ஆசிரியத் தொழிலில் இருந்து இளைப்பாறிய பின் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேரும்வரை வாழ்ந்து வந்தார்கள். எனவே இந்தப் புராதன மூர்த்தியையும இப்பெரியாரையும் ஒருங்கு தருசிக்கும் பாக்கியம் பன்முறை எனக்குக் கிடைத்தது. (வளரும்)

---

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 1—12—57 —— 7—12—57. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

குடும்பச் சூழலில் இந்தவாரம் சிலமுரண்பாடுகளிருக்கும். ஆனால் நீர் அவற்றிலிருந்து நீங்கக்கூடியதாயிருக்கும். தேகசுகமும் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. பணத்துறையில் ஒரு நல்லவாரம்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,**

மனச் சமாதானமிருக்கமாட்டாது. இரகசியப் பகைவரால் இடைஞ்சல்களுக்கிடமுண்டு. இனத்தவர்களுடன் சண்டைகளைத் தவிர்க்கவும் மேலதிகாரிகளுடன் பிழை எண்ணங்களுக்கும் இடமில்லாமலில்லை.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.**

ஒரு நல்லவாரம். உம்முடைய பண நிலைமைகள் திருந்தும், சொந்தச் சிக்கல்களும் நீக்கப்படும், குடும்ப நிலைமைகள் நல்லாயிருக்கும். உம்முடைய முயற்சிகளை முன்னேற்றுக.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.**

இனத்தவர்களுடன் இந்தவாரம் சண்டைகளுக்கிடமுண்டு, வரவு செலவுகளைச் சமாளிக்கமாட்டாது வருத்தப்படுவீர். சுகவீனங்களுக்கிடமுண்டு. வயிற்றுக்கோளாறுகளுண்டாகக் கூடும்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்,**

வாரத்தின் முதல்நாள் மிகப் பழுதானதாயிருக்கும். நண்பருடன் சண்டைகளுக்கும் கந்தோரில் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு. வாரமிகுதியும் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. மற்றவர்களை விரைந்து நம்ப வேண்டாம்,

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

முதல் இரு நாட்களும் புதுக் கருமங்களுக்கு நல்லாயிருக்கும். செவ்வாய் புதனும் வியாழனும் உமக்குச் சிலதொந்தரவுகளையுண்டாக்கக்கூடும். வாரமிகுதி திரும்பவும் நன்ருகும்,

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

உம்முடைய சொந்தக் கருமங்களில் இந்த வாரம் சில திருத்தங்களைக் காண்பீர். இடைஞ்சல்களிலிருந்து நீங்க நண்பர் உதவி செய்வர். வியாழன் பிற்பகல் வெள்ளி சனி கவனமாய்க்கழிக்க வேண்டும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

உமக்கு இந்தவாரம் மனச்சமாதானமிருக்கமாட்டாது. சுகவீனங்களுக்கும் கண் நோய்களுக்கும் இடமுண்டு. பிழை எண்ணங்களிலிருந்தும் இடைஞ்சல்களிலிருந்தும் நீங்கமாட்டாது வருந்தப்படுவீர்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

பணத்துறையில் நல்ல வாரம். சில புதுப் பொறுப்புக்களை நீர் ஏற்கவேண்டி வரும். ஆனால் தேகசுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. கண் கோளாறுகளுக்கிடமுண்டு.

**மகாராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

அணிமையில் வரும் எதிர்காலத்தில் உம்முடைய நடைமுறைகளிற் சில மாற்றங்களுக்கிடமுண்டு வேலை கூடுதலாயிருக்கும். உமக்கு மனச்சமாதானமும் இருக்கமாட்டாது. ஆனால் பணத்துறையில் நல்லவாரம்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

ஒருநல்ல வாரம். உம்முடைய சொந்தக் கருமங்களிலும் உத்தியோக கருமங்களிலும் மிகுந்த நன்மையானமாற்றங்களைக் காண்பீர். நண்பர் அதிக உதவியாயிருப்பர். பகைவர் அழிவுக்கும் இடமுண்டு.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

குடும்பக் குழப்பங்களுக்கிடமுண்டு. தேக சுகமும் நல்லாயிருக்கமாட்டாது. பல சண்டைகளுக்கு இனத்தவர் காரணமாயிருப்பர், கோபத்தை அடக்குக அல்லது [illegible] உள்ளாகவேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தராயணத்தின் உத்தமம்

--0--0--

1-ம் பக்கத் தொடர்ச்சி

வில் நட்டம் பயின்றுடும் நாதனே" என்று போற்றித் துதித்தார்கள். ஏனென்றால் மார்கழி மாசத்தில் வரும் திருவாதிரை நாளில் நடுநிசியில் ஆர்திரா தரிசனம் பதஞ்சலி வியாக்கிரமபாதர்' என்னும் முனிவர்களுக்கு தில்லையில் நடராசநாதாந்த நடனம் ஆடிக்காட்டிய படிலேயாதான். இதனால் அன்றே கிருஷ்ண பகவானும் மாசங்களில் மார்கழி மாசத்தை விசேஷமாகக் கீதையிற் கூறினர். கருமையான இருண்ட தேவ இராத்திரியில்கன்னி இராசியில்நடுநிசியில்பிள்ளை பிறந்த மூகூர்த்தத்தில் கன்னி மரியாளும் தன்புதல்வனைப் பெற்றாள் என்று பின்னே கொண்டாடினர்கள். டிசம்பர் மீ 22-ந் திகதி சூரியன் தென்திசையின் முடிவுக்கு வந்து ஒருநாள் தங்கி 24-ந் திகதி நடுநிசியில் வடக்கே திரும்புவதாக அமைந்த சம்பவத்தைக் கவனித்தே அந்தக் கன்னிமுகூர்த்தத்தில்யேசு நாதரும் கன்னி மரியாளுக்குப் பிள்ளையாகப் பிறந்தார் என்றால் இது எவ்வளவு முக்கியமான தாய்க் கணிக்கப்பட்டதென்பதை உணரலாம். சூரியன் வடக்கு நோக்கிப் போய்த் தென்றிசை திரும்பும்போது கன்னி மூகூர்த்தத்திலே சம்பவிக்கின்றது. ஆனால் அது தேவலோகத்தில் மத்தியானமும் எமக்கு சூரியன் மிதுனத்தில் நிற்கும்போது ஜூன் மாதம் 22-ந்திகதியில் சென்று ஒருநாள் அங்குதங்கி24-ந் திகதி மத்தியானம் திரும்புவது எனலாம். இந்தமாதிரி சூரியன் வடக்குநோக்கியும் தெற்கு நோக்கியும் செல்லுவதை உத்தராயணம் என்றும் தெட்சணயனம் என்றும் சொல்லுவார்கள். ஆனாற் சூரியனின் அயனம் சத்தைக் கவனிக்கில் ஒவ்வொரு இராசியிலும் 2160 வருடத்திற்குத்தான் அவர் இப்படிக் கமனம் செய்வதாகக் கூறுவார்கள். அப்படியே 25920 வருடத்திற்கு ஒருக்கால் அதே இராசியில் சூரியன் அயனத்தை மறுபடியும் ஆரம்பிப்பார். இதைப் precession of the equinoxes என்று ஆங்கிலத்திற் கூறுவார்கள். சிலருக்குத் தினம் காலையிலும், மற்றவர்களுக்கு மாலையிலும் இன்னும் சிலருக்கு மற்ற இராத்திரியிலும் தொடங்கும். அதுபோலவேசூரியன் உத்தராயணம் தொடங்கும்போது அர்த்தராத்திரியிலும்நடுரேகையைக் கடக்கும்பொழுது உதயத்திலும் வருடம் பிறக்கும் கன்னி இராசி உதயமாகும் நேரம் மூன்று தாரகை கூடிய மிருகசீரிட (Orion) நட்சேத்திரம் எப்போதும் உச்சியில்நிற்கும். இதனாலேதான் அர்த்தராத்திரியில் நேரத்தைநுட்பமாக நிச்சயிக்க முடியும். இம்மூன்று தாரகைகளையும் யேசு பிறந்தபோது கீழ்த்திசையிலிருந்துசென்ற(Margi)"மார்சி"களுக்கு ஒப்பிடுவார்கள். மாட்டுத்தொழுவத்தில்பிறந்த படியால் அன்று சந்திரன் இடப (மாடு) இராசியில் இருந்ததாக யோசிக்க இடமுண்டு. யேசுவின்பன்னிரண்டு அப்போஸ்தலரையும் பன்னிரண்டு இராசிகளுடன் ஒப்பிடுவார்கள். இதனாலேநாம்யூகிக்கக்கூடியது யேசு பிறக்கமுன் சூரிய வழிபாடும் சூரியனுடைய அயனங்களும் பன்னிரண்டு இராசிகளும் வழக்கில்இருந்திருப்பதையேயாம். வைதீகர்களுடைய விஷ்ணுவும் பன்னிரண்டு ஆதித்தர்களும் நான்கு இருக்களும் நான்கு தேவகன்னிகளுமாகிய அரம்பை, மேனகை, ஊர்வசி திலோத்தமையும், பன்னிரண்டு இராசிகளுடனும் நான்கு இருதுகளுடனும் ஒப்பிடலாம். யேசு உண்மையாகவே மார்கழி மாசத்தில் அர்த்த இராத்திரியில் பிறந்திருந்தால் அவர் கன்னி இலக்கினமும் 4-ம் இடமாகிய தனுவில் சூரியனும் கூடிய தான வேளையைக் குறிப்பிடத் தக்கது. மேலும் சந்திரன் இடபத்திலும் இருந்திருக்கலாம்எனலாம்.

மார்கழி மாசம் திருவாதிரை நாள் சைவர்களுக்கு நன்னாள். மார்கழி மாசத்தில் வரும் பூர்வபக்ஷ ஏகாதசியை வைகுண்ட ஏகாதசியென்று ஸ்ரீவைஷ்ணவர்கள் பாராட்டுவார்கள். சூரிய அயனத்தைக் கவனிக்கும் சௌரர்கள் மார்கழி மாசத்தில் வரும் உத்தராயணத்தை முக்கியமாக மதிப்பார்கள் பழைய கிரேக்கர்கள், உரோமர்களும் மற்றும் மேலைத்தேச மக்களும்சூரியனை வழிபட்டனர். பாரசீகரும் சூரிய வழிபாடு கைக் கொண்டனர். தற்காலக் கிறீஸ்தவர்களும் மார்கழி மாசத்தில் மத்திராத்திரிய தமது தேவகுமாரன் பிறந்ததாகக் கொண்டாடுவதும் கவனிக்கத்தக்கது. 'உலகம் பலவிதம் அதில் நாமும் ஒரு விதம்.


## யாழ்ப்பாணம்
# ஐக்கிய இலாபநிதி
**1918-ம் ஆ ஸ்தாபிதமானது**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்து கொள்ளலாம்

**S. கனகசபை**
Std 14 சிறுப்பர்


மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ் செய்வாரிற் றலை.






### கோணேசர் திருக்கோயிலின் எதிர் காலம்

கோணேசர் திருக்கோயிலிருக்கும் கோட்டைப் பகுதி பிரித்தானியர் வசமிருந்து இப்பொழுது இலங்கைக் கடற்படைப் பகுதியினரின் அதிகாரத்துக்குள்ளாயிருக்கின்றது. இத திருக்கோயிலின் உரிமை யாருக்குள்ளது என்ற கேள்வி வெளிநாட்டமைச்சுப் பகுதியிலிருந்து வெளிவந்துள்ளதாம். கோணேசர் திருக்கோயிற் புனருத்தாரணசபையார் இத்துறையில் வேண்டிய செயலாற்றுகின்றனரெனக் கூறப்படுகின்றது.

### விடுமுறை நாட்கள்

சிவப்பிராமண சங்கத்தின் கோரிக்கை

கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கைச் சிவப்பிராமணர் சங்கக் கூட்டமொன்றில் பதினொரு திருநாட்கள் விடுமுறை நாட்களாக்கப்படுதல் வேண்டுமென்னும் பிரேரணை ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்நாட்கள் பின்வருமாறு:

தைப்பொங்கல், மகாசிவராத்திரி, வருடப்பிறப்பு, ஆடி அமாவாசை, ஆவணிச் சதுர்த்தி. ஆவணி அவிட்டம், மகாநவமி, விஜயதசமி, தீபாவலி, வைகாசி விசாகம், திருவள்ளுவர் குருபூசை.

# யாழ். நகரசபைத் தேர்தல்

1-ம் பக்கத் தொடர்ச்சி

### வெற்றி விபரங்கள்

வட்டாரம் 1

திரு. அல்பிறெட் சுவாம்பிள்ளை 284, திரு. ஐ. எஸ். இராசநாயகம் 260, ஏ. ஜீ. இராசசூரியர் 210, கே. குலசேகரசிங்கம் 94, கே. எஸ். செல்லையா 57.

வட்டாரம் 2

திரு. ஏ. ஜோசேப்பு 1200
திரு. பி. எம். ஜோன் 1136

வட்டாரம் 3

திரு. ஜி. நல்லையா (அரசாங்க மேற்சபை அங்கத்தவர்) 1023 திரு. எம். சாக்கோபு 997 டி. ஜேம்ஸ் 406.

வட்டாரம் 4

திரு. அல்பிறெட் துரையப்பா 971, கே. சத்தியானந்தசிவம் 690

வட்டாரம் 5

திரு. பி. காசிப்பிள்ளை போட்டியின்றித் தெரிவு

வட்டாரம் 6

திரு. எஸ். நடராசா 911
திரு. எஸ். சி. மகாதேவா779,
திரு. எஸ்.சிவக்கொழுந்து279

வட்டாரம் 7

திரு. கே. துரைசிங்கம் 820
திரு ஏ நடராசா 754
திரு. பி. சிவஞானசுந்தரம் 73

வட்டாரம் 8

திரு ஏ. துரைராசசிங்கம் 875, திரு. வி. கனகசபாபதி 715, சி. ரி. நவரத்தினம் 91

வட்டாரம் 9

திரு. எஸ். எஸ். நவரத்தினம் 768, திரு. என். தேவபாலசுந்தரம் 533, திரு. கே. ஐயாத்துரை 300

வட்டாரம் 10

திரு. ஏ. ஜே. காசிப்பிள்ளை 1194, எம். கார்த்திகேசன் 1100, வி. பொன்னுத்துரை 318

வட்டாரம் 11

ஹாஜி என். எம். எம். அபுசாலி 601 திரு. ஆர், வீரசிங்கம் 531, திரு. முகமது கலீல் 382, திரு. ஏ. கபீபு முகமது 286.

வட்டாரம் 12

குவாசி எம். எம். சுல்தான் 1132, திரு வி. எம. மாசிலாமணி 448, திரு. எம். அப்துல்காதர் 66.

வட்டாரம் 13

திரு. எஸ். இராசரத்தினம் 846, திரு. எம். பாலசிங்கம் 427, திரு. எஸ், வீரசிங்கம் 190, திரு கே. வி. தேவேந்திரன் 34.

வட்டாரம் 14

திரு. ஆர். சி மன்மதராயன் 1513, திரு. எஸ். சிவரத்தினம் 367, எஸ் நடராசா 358.

வட்டாரம் 15

திரு ஏ. விசுவநாதன் 843 ஜே. எஸ். நிக்கலஸ் 384.

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும், சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 29-11-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org